பத்திரிக்கை செய்தி

வழக்கினை நீதிமன்றத்தில் நடத்துவதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய அரசு சிறப்பு வழக்கறிஞர் கைது

புகார்தாரர் திரு.செந்தில், பையர்நத்தம் கிராமம். பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், தருமபுரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் பெண் குழந்தைக்கு நடைபெற்ற பாலியல் குற்றம் தொடர்பாக போக்சோ வழக்கு பதிவு செய்யப்பட்டு தருமபுரி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்துள்ளது. மேற்படி போக்சோ வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் குழந்தை சார்பாக ஆஜரான அரசு சிறப்பு வழக்கறிஞர் திருமதி.கல்பனா, மேற்படி வழக்கினை நடத்துவதற்கு ரூ.15,000/- லஞ்சமாக தரவேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தருமபுரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 05.12.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.கல்பனா, அரசு சிறப்பு வழக்கறிஞர், தருமபுரி மாவட்டம் அவர்கள் லஞ்ச பணம் ரூ.10,000/-யை (முன் பணமாக) புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.